மாபெரும் தொலைநோக்காளர் – ‘பாரத ரத்னா’

எம்.எஸ்.சுவாமிநாதனின் அடியொற்றி மாணவர்கள் சமூகப் பணியாற்ற வேண்டும்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஆக. 8 -

‘பாரத ரத்னா’ எம்.எஸ்.சுவாமி நாதன் அவர்களின் நூற்றாண்டுப் பிறந்தநாளையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

பசுமைப் புரட்சிக்கு வித்திட்டுப் பசியாற்றிய மானுடநோக்கு கொண்ட அறிவியலாளர் ‘பாரத ரத்னா’ எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் நூற்றாண்டுப் பிறந்த நாள் இன்று!

தமது அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான எம்.எஸ். சுவாமி நாதன் அவர்களது பெயரிலான ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு நிலம் வழங்கி, குடியரசுத் தலைவ ராக இருந்த கே.ஆர்.நாராய ணன் அவர்களுடன் இணைந்து, அங்குள்ள JRD Tata சுற்றுச்சூழல் தொழில்நுட்ப மையத்தைத் திறந் தும் வைத்தார் அன்றைய முதல மைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அவரது வழியிலான நமது திரா விடமாடல் அரசும், போரூர் Wet land Park, தஞ்சை ஈச்சங் கோட்டை வேளாண் கல்லூரி ஆகியவற்றுக்குத் எம்.எஸ். சுவா மிநாதன் அவர்களது பெயரைச் சூட்டியுள்ளதோடு,

பயிர்ப் பெருக்கம் மற்றும் மரபி யல் பாடங்களில் அதிக மதிப் பெண் பெறும் மாணவருக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்க ளின் பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும் என்றும் அறிவித்து அவரது நினைவைப் போற்றி வருகிறோம்.

Climate Change உட்பட இன்று நாம் எதிர்கொண்டு வரும் பல சவால்களைப் பல பத்தாண்டுக ளுக்கு முன்பே கணித்து, எச்ச ரித்த மாபெரும் தொலைநோக்கா ளரான எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களை அடியொற்றி, மேலும் பல மாணவர்கள் சமூகத்துக்குப் பணியாற்ற வேண்டும் என அவ ரது நூற்றாண்டில் கோரிக்கை யாக முன்வைக்கிறேன்!

தந்தையின் பணியையும் புக ழையும் போற்றும் திருமிகு. சவு மியா சுவாமிநாதன் அவர்களது பணி சிறக்கவும் வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித் துள்ளார்.

கள்ளக்குறிச்சி – உளுந்தூர்பேட்டை கீழ் புத்தமங்கலம் கிராமத்தில்

கோவில் திருவிழாவின் போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதியுதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக 9-

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர் பேட்டை வட்டம், கீழ் புத்த மங்கலம் கிரா மத்தில் கோவில் திருவிழாவின்போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும் பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந் தூர்பேட்டை வட்டம், கீழ் புத்தமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு.செந்தில்கு மார் (வயது 36) த/பெ.ராஜாங்கம் என் பவர் நேற்று (06.08.2025) அதி காலை சுமார் 12.30 மணியளவில் மேற்படி கிராமத்தில் நடைபெற்ற முத்து மாரியம்மன் கோவில் திருவிழா சாமி ஊர்வலத்தின்போது சகடையிலிருந்த குடை மின்கம்பியில் பட்டு அறுந்து கீழே விழுந்ததில் எதிர்பாராதவிதமாக கரகம் தூக்கிச் சென்ற மேற்குறிப்பிட்ட திரு.செந்தில்குமார் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், அவரது உறவி னர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்க லையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவரின் குடும் பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதி யிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட் டுள்ளேன்.

தேர்தல் ஆணையத்துடன் இணைந்து பா.ஜ.க. வாக்குகளைத் திருடுகிறது!

ஒவ்வொரு தொகுதியிலும் போலி வாக்காளர்கள் ஆயிரக்கணக்கில் சேர்ப்பு!

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஆக.9

புதுடெல்லியில் உள்ள காங் கிரஸ் தலைமை அலுவலகத் தில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும் காங்கிரஸ் முன் னாள் தலைவருமான ராகுல் காந்தி நேற்று முன்தினம் செய் தியாளர்களுக்கு பேட்டி அளித் தார். அப்போது பீகார் வாக்கா ளர் தீவிர திருத்த பட்டியல் விவகாரம் குறித்து பேசினார். அதில், “சிறப்பு வாக்காளர் பட்டி யல் திருத்தம் ஜனநாயகத்திற்கு எதிரானது. பீகார் வாக்காளர் பட்டியலில் முறைகேடு உள் ளது. தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்பு வேறு மாதிரி இருந்தாலும், தேர்தல் முடிவு பாஜகவிற்கு சாதகமாக உள் ளது. புல்வாமா தாக்குதல், சிந் தூர் நடவடிக்கை போன்ற பல காரணங்கள் கருத்துக்கணிப்பு மாற்றத்துக்கு காரணம். தேர்த லுக்கு முன், பின் கருத்துக்க ணிப்பு, உண்மையான தேர் தல் முடிவு ஆகியவை ஒன்றுக்கொன்று வேறுபடுகின் றன என்று தெரிவித்தார்.

தொடர்ந்து திடீரென பீகார் வாக்காளர் பட்டியலில் சிறப்பு திருத்தம் செய்வது சந்தே கத்தை ஏற்படுத்துகிறது. மராட் டியத்தில் 5 மாதங்களில் ஏராள மான வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர். மராட்டியத் தில் 5 ஆண்டில் சேர்க்கப்பட் டதை விட 5 மாதங்களில் ஏரா ளமான வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர். மராட்டியத் தில் கடைசி நேரத்தில் அதிக வாக்குகள் பதிவானதாக ஆணையம் சொல்கிறது. வாக் குப்பதிவு முடியும் கடைசி நேரத் தில் எந்த வாக்குச்சாவடிகளி லும் அதிகம் கூட்டம் இல்லை. வாக்குச் சாவடிகளில் பொருத் தப்பட்ட சிசிடிவிகளை கேட்ட போது ஆணையம் தர மறுத்து விட்டது. பல தொகுதிகளில் பதிவான வாக்குகளுக்கும் எண்ணப்பட்ட வாக்குகளுக் கும் இடையே முரண்பாடு உள் ளது என்றும் அவர் கூறினார்.

“பாஜகவுக்கு சாதகமாக ஒவ்வொரு தொகுதிகளிலும் குறிப்பிட்ட அளவில் போலி வாக்காளர்கள் சேர்க்கப்படுகின் றனர். தேர்தல் ஆணையத்து டன் இணைந்து பாஜக வாக்கு களை திருடுகிறது. மென்பொருள் மூலம் ஆய்வு செய்யக்கூடிய வகையில் வாக் காளர் பட்டியலை வழங்க தேர் தல் ஆணையம் மறுக்கிறது. ஒரு நபருக்கு பல மாநிலங்க ளில் வாக்கு உள்ளது. கர்நாட காவின் மஹாதேவபுரா பகுதி யில் கிட்டத்தட்ட 12,000 போலி வாக்குகள் பதிவாகியுள்ளன. வாக்காளர் பட்டியல் விவரங் களை நாங்கள் ஆய்வு செய்யக் கூடாது என தேர்தல் ஆணை யம் கருதுகிறது.”

இவ்வாறு அவர் கூறினார்.

தமிழ்நாட்டின் பின்தங்கிய மாவட்டங்களில்

புதியதாக இ.எஸ்.ஐ. மருத்துவனைகள் அமைக்கப்படுமா?

மக்களவையில் சி.என். அண்ணாதுரை கேள்வி!

சென்னை,ஆக.9-

தமிழ்நாட்டில் பின் தங்கிய மாவட்டங்களில் இ.எஸ்.ஐ. மருத்துவம னைகள் அல்லது மருந்த கங்கள் அமைக்க முன் மொழிவு உள்ளதா என்று மக்களயில் திரு வண்ணாமலை தொகுதி உறுப்பினர் சி.என். அண்ணா துரை கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு:

(அ) தமிழ்நாடு உட் பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள இஎஸ்ஐ மருத்துவமனை களை நவீனமயமாக்கு தல் மற்றும் மேம்படுத்து வதற்கான முன்மொழிவு களுக்கு ஊழியர்களின் மாநில காப்பீட்டுக் கழ கம் (ESIC) ஒப்புதல் அளித்துள்ளதா:

(ஆ) அப்படியானால், தமிழ்நாட்டில் நவீனமய மாக்கல்/மேம்படுத்துவ தற்காக தேர்ந்தெடுக்கப் பட்ட ESI மருத்துவ மனைகளின் பெயர், இடம், படுக்கையின் வலிமை மற்றும் நிறுவப் பட்ட ஆண்டு உள் ளிட்ட விவரங்கள்:

(இ) முன்மொழிய ப்பட்ட நவீனமயமாக் கல் மற்றும் மேம்படுத்த லின் தன்மை மற்றும் அவற்றை முடிப்பத ற்கான காலக்கெடு பற் றிய விவரங்கள்:

(ஈ) கடந்த மூன்று ஆண்டுகளிலும், நடப்பு ஆண்டிலும், மருத்துவ மனை வாரியாக, தமிழ் நாட்டில் மேற்படி தரம் உயர்த்தப்பட்ட பணிக ளுக்காக ஒதுக்கப்பட்ட மற்றும் விடுவிக்கப்பட்ட நிதியின் விவரங்கள்:

(உ) தமிழ்நாட்டில் உள்ள ESI மருத்துவம னைகளின் செயல்தி றனை பாதிக்கும் பணி யாளர்கள் பற்றாக்குறை, காலாவதியான உபகர ணங்கள் அல்லது உள் கட்டமைப்பு இடையூறு கள் குறித்து அரசு அறிந்திருக்கிறதா மற் றும் அப்படியானால், அரசு எடுத்த தீர்வு நடவ டிக்கைகளின் விவரங்கள்: மற்றும்

(ஊ) தமிழ்நாட்டின் பின்தங்கிய மாவட்டங் களில் புதிய இஎஸ்ஐ மருத்துவமனைகள் அல் லது மருந்தகங்கள் அமைக்க ஏதேனும் முன்மொழிவு உள்ளதா மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள் விகளை கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய தொழிலாளர் நலத்துறை இணை அமைச்சர் பதில ளித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு புதுடெல்லி அண்ணா கலைஞர் அறிவாலயத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு கழக துணைப் பொதுச்செயலாளரும் மாநிலங்களவை கழகக் குழுத் தலைவருமான திருச்சி சிவா தலைமையில் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவுநாளை முன்னிட்டு

திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் சிலைக்கு மரியாதை!

பூண்டி கே.கலைவாணன் தலைமையில் பெருந்திரளானோர் பங்கேற்ற அமைதி ஊர்வலம்!

திருவாரூர், ஆக .9-

மண்ணின் மைந்தர் முத் தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை முன் னிட்டு, திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் பிரமாண்ட அமைதி ஊர் வலம் நடைபெற்று, மேம் பாலம் கலைஞர் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப் பட்டு மரியாதை செலுத் தப்பட்டது.

மண்ணின் மைந்தர் முத் தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சொந்த மாவட்டமான திருவாரூரில் மறைந்த அந்த மகத்தான மாமனித ருக்கு கழகத்தின ரும், பொதுமக்களும் இணைந்து நடத்திய நினைவு தினப்பேரணி திரு வாரூர் முத்துவேலர் அஞ்சு கம் அலுவலகத்தின் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மரியா தையை செலுத்தி துவக்கப் பட்டது, நேதாஜி ரோடு, கலைஞர் நூற்றாண்டு வணிக வளாகம், பழைய பேருந்து நிலையம், ரயில்வே ரோடு வழியாக வந்த பிரமாண்ட ஊர்வ லத்தின் இறுதியில் முத்த மிழ் அறிஞர் கலைஞர் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மரி யாதை செலுத்தப்பட்டது.

மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற இந்த பிர மாண்ட ஊர்வலத்தில் அவைத் தலைவர் க.தன் ராஜ், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலை யாமங்கலம் ஜி.பாலு, முன் னாள் துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள் மாவட்ட துணை செயலா ளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர், பொருளா ளர் மு.வெங்கடேசன், ஒன்றியக்குழு முன்னாள் தலைவர் சோம.செந்தமிழ் செல்வன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.ஆடலரசன், ஞானசேக ரன், ஆர்.எஸ்.பாண்டியன், அரிச்சபுரம்.செல்வம், பொதுக்குழு உறுப்பினர் கள் டி.செந்தில், கே.எஸ். எஸ்.தியாகபாரி, செல்வ ஜெயதேவன், குடவாசல் எம்.முருகேசன் மாநில விவசாய தொழிலாளர் அணிதுணை செயலாளர் இரா.சங்கர், மாநில மாண வரணி துணை செயலாளர் மன்னை.த.சோழராஜன், ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பரசன், கோ.தெட் சிணாமூர்த்தி, ஆர்.பாலச் சந்திரன், சித்தேரி சிவா, டி.எஸ்.டி.முத்துவேல், நா.கவியரசு, கே.வி.கே. ஆனந்த்,ஐ.வி.குமரேசன், வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், பால. ஞானவேல், இரா. மனோகரன், ப.பிரகாஷ், புலிவலம் ஏ.தேவா, வே. மனோகரன், எஸ்.ஜோதி ராமன், ப.பிரபாகரன், கேப்டன் செல்வராஜ்.நகர செயலாளர்கள் வீரா. கணேசன், ஆர்.ராஜசேக ரன், பா.சிவநேசன், வாரை.எஸ். பிரகாஷ், எஸ்.வி. பக்கிரிசாமி, நன்னி லம் பக்கிரிசாமி, சிவ. தியாகு, ஏ.கே.டி.சேரன், பூண்டி கே.கலைவேந்தன், நகர்மன்ற தலைவர்கள் புவனப்ரியா செந்தில், துணைத்தலைவர் அகிலா சந்திரசேகர், பாத்திமா பஷீரா , மற்றும் பணகுடி ஏ.எஸ்.குமார் உள்ளிட்ட சார்பு அணிகளின் அமைப் பாளர்கள் ஏராளமான பொதுமக்கள், வர்த்தகர் கள், மகளிர் அமைப்பினர் , சமூக இயக்கங்களின் பிர திதிகள், அரசியல் கட்சிக ளின் நிர்வாகிகள் கழகத்தி னர் என பெருந்திரளாக பங்கேற்று மண்ணின் மைந்தருக்கு மரியாதை செலுத்தினர்.

மேலும் காட்டூர் அஞ்சு கத்தம்மையார் நினைவி டம், கலைஞர் கோட்டம், திருவாரூர் கீழவீதி கலை ஞர் அவர்களின் இல்லம், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், நகர கழக அலுவலகம், புலிவலம் கழக அலுவலகம் உள் ளிட்ட பகுதிகளிலும், ஒன் றிய. நகர. பேரூர் மற்றும் வார்டு கிளைக்கழக பகுதி களிலும் முத்தமிழ் அறி ஞர் கலைஞர் அவர்களின் நினைவஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு தின அமைதி பேரணி, மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில், நகர கழகம் எதிரே உள்ள அண்ணா சிலையில் இருந்து புறப்பட்டு, மேம்பாலம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலை வரை வந்து கலைஞர் அவர்களின் திருஉருவ சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. மாநில,மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் பங்கேற்றனர்.